

Vol.23 | No. 5 | May 2019

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## PRIESTLY ORDINATION, FR. ABILASH XAVIER RAJ





## ST. ALPHONSA COLLEGE SECOND CONVOCATION

# HOLY WEEK RECOLLECTION FOR PRIESTS AND RELIGIOUS





# JUBILEE CELEBRATION OF FR. GEO CHUZHIKUNNEL





THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 23 No :05 MAY 2019

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 07 |
| மறைக்கல்வி | 10 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| இளையோர் இயக்கம் | 15 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 16 |
| மிஷன் லீக் | 18 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 19 |
| Birthdays & Feastdays | 20 |
| இல்வாழ்வு இயக்கம் | 21 |
| சீனாய் தியான இல்லம் | 22 |
| சமூக சேவை சங்கம் | 23 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 24 |
| கல்வி நிறுவனம் | 26 |
| அல்போன்சா கல்லூரி | 28 |
| சீனாய் தியான இல்லம் | 35 |
| மறைவட்டச் செய்திகள் | 30 |
| செங்கோட்டைச் செய்திகள் | 34 |
| Transfers | 35 |
| Bishop's Engagements | 42 |



*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250533
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/93/2019 30April 2019

Dears,

Greetings from Bishop's House, Thuckalay!

We are in the season of Easter. Let us briefly reflect upon the death and resurrection of Jesus. Whenever we recite the Apostles' Creed, we affirm our faith in the resurrection of Jesus - "On the third day He rose again from the dead." In the Acts 1:3, we read: "To whom He also presented Himself alive after His suffering by many infallible proofs, being seen by them during forty days and speaking of the things pertaining to the kingdom of God." The phrase, "after His suffering," refers to the complete death of Christ. There are many proofs showing us that Christ died completely, but in particular, John 19:34 states: "But one of the soldiers pierced His side with a spear, and immediately blood and water came out."

The fact that Jesus was crucified to death has been recognized by everyone of everywhere. This punishment of crucifixion, a condemnation that the Romans dealt to foreigners, was a cruel punishment sentenced to political insurgents and slaves. Before the rise of the Roman Empire, crucifixion was generally carried out by hanging a convict on a cross by tying his hands and feet to it, and then killing the condemned by piercing his chest with a spear.

But the Roman version of crucifixion was a punishment that nailed, instead of tying, the hands and feet of a convict to a cross and left him hanging on the cross to die a slow death. As such, it is said that it took a considerable time for the condemned to die, usually 3-4 days, but at times even a week. We cannot even begin to imagine how painful it must have been to be punished in such a way, being nailed, drained of blood, suffering from increasingly unbearable thirst, bombarded relentlessly by the sun, and encircled by flying vultures. The condemned were made to suffer until the very last moment of death. Because of the extreme

cruelty of this punishment, the Emperor Constantine, it is said, eliminated this particular form of punishment.

What, then, explains the fact that Jesus died in just six hours? As mentioned above, when one of the soldiers pierced His side with a spear, blood and water came out. As this shows, Jesus died so soon because he suffered such a great heartache for sinners that it literally broke and burst. In other words, he died from a ruptured heart.

In three days after his death, Jesus rose again in a perfect body. What is strange is that despite this, some people hesitated to believe in the resurrected Jesus, even as they professed to recognize his death. This can only be seen as a work of the devil trying to prevent humankind from believing in this truth, as stated in Luke 8:12: "Those by the wayside are the ones who hear; then the devil comes and takes away the word out of their hearts, lest they should believe and be saved." To deny the truth of the resurrection of Jesus, the devil therefore advocates through unbelieving, secularized scholars such false hypotheses as the apparent death hypothesis, the spiritual resurrection hypothesis, the hallucination hypothesis, the manipulation hypothesis, the stolen body hypothesis, and others. But the verity of the resurrection of Jesus has many definitive proofs.

**The Fact that Jesus Presented Himself Alive is a Proof**

Acts 1:3 tells us that Jesus presented himself alive to his disciples by many infallible proofs. No matter what people say, when our Lord himself declares to be alive, there is then no ground for any dispute.

Jesus had liberated power over life and death. As John 10:17-18 states: "Therefore My Father loves Me, because I lay down My life that I may take it again. No one takes it from Me, but I lay it down of Myself. I have power to lay it down, and I have power to take it again. This command I have received from My Father."

In Revelation 1:18, Jesus also says: "I am He who lives, and was dead, and behold, I am alive forevermore. Amen. And I have the keys of Hades and of Death." Our Lord has the power to rise from the dead to live again, for He is God the Almighty and a perfect man at the

same time.

"The wages of sin," as Romans 6:23 tells us, "is death." This is the unchangeable, righteous law of God. As such, Jesus took care of the sins of the world and blotted them all out through his baptism and blood. Because he made all the sins of the world disappear, he rose from the dead again and has become the God of those who believe in him. This is how the righteous law of God is established.

**That His Tomb was Empty is an Evidence**

Matthew 27:57-66 tells us that a rich man from Arimathea, named Joseph, laid the dead body of Jesus in a tomb hewn out of rock, and that he sealed the tomb by rolling a large stone against its door. The passage also tells us that a guard was placed at the tomb to secure the tomb. But the tomb became empty as the Lord rose from the dead with his power and came out of his tomb. Luke 24:3 says: "Then they went in and did not find the body of the Lord Jesus." What else can this be but the proof of the Lord's resurrection?

Jesus is a great, historic figure. One of the proofs is the chronological use of Anno Domini (A.D.), which means "in the year of our Lord." Years and months have been set, in other words, based on the day of his coming. He is the Lord of history, creation and salvation. If he had not been able to rise again from the dead, his tomb would have remained closed as a great historical landmark. The tombs of the great figures of history still remain as places of great interest. For example, Confucius' tomb is in China, Buddha's tomb is found in India, and that of Mohammed is at Mecca, Saudi Arabia.

If Christ had not risen from the dead again, his tomb should still remain closed like theirs. But because he rose from the dead in three days, His tomb has been opened. This is believing in our Lord, the one and only God.

**That He Ate after He Rose from the Dead is Still another Proof**

Spirits do not eat. But the resurrected Lord ate. Luke 24:40-43 states: "When He had said this, He showed them His hands and His feet. But while they still did not believe for joy, and marvelled, He said to them, 'Have you any food here?' So they gave Him a piece of a broiled fish and some honeycomb. And He took it and ate in their presence." Acts 10:40-41

also testifies: "Him God raised up on the third day, and showed Him openly, not to all the people, but to witnesses chosen before by God, even to us who ate and drank with Him after He arose from the dead." That Jesus ate provides us the explicit proof of His resurrection.

In 1 Corinthians 15:3-4, Paul also testifies: "For I delivered to you first of all that which I also received: that Christ died for our sins according to the Scriptures, and that He was buried, and that He rose again the third day according to the Scriptures." The Bible is the inspired Word of God with absolute authority that can be neither added to nor subtracted from. As this Bible had prophesied, Jesus died and rose again.

Around the time of Jesus' death, his disciples had been trembling in fear. But after they were convinced of his resurrection, they became bold to spread through Jesus the resurrection from the dead. As Acts 4:18-20 tells us, "So they called them and commanded them not to speak at all nor teach in the name of Jesus. But Peter and John answered and said to them, 'Whether it is right in the sight of God to listen to you more than to God, you judge. For we cannot but speak the things which we have seen and heard." Peter and other Apostles also replied, "We ought to obey God rather than men" (Acts 5:29).

Although Jesus' disciples had trembled before the dead Jesus, once they saw the living Jesus, they became bold. From then on to the very present, the reason why the saints have spread this gospel even as they have been persecuted for Christ, and why they have been willing to die for its sake, is because of the certainty of the resurrection of Christ and the assurance of their own resurrection as well.

Jesus' resurrection is a prelude to our own resurrection. In 1 Corinthians 15:20, it is stated, "But now Christ has risen from the dead, and has become the first fruits of those who have fallen asleep." As such, the teachings of the Pauline Epistles are also centred around, first of all, the core truth of the resurrection of Jesus Christ, and then on the message that this resurrection also brings us our own resurrection.

We need to keep up the fervour of the Easter as we prepare for the celebrations of Ascension and Pentecost. During these days, let us prepare our

people for an outpouring of the Holy Spirit as Our Blessed Mother and the Apostles received so that our faith in the Risen Lord may be strengthened and may become apostles of the Risen Lord!

**CONCLUSION**

The month of May is a special time for us to pay homage to our Blessed Mother Mary. She has a unique role in salvation history as the Mother of God, conceived without Sin, who by her own free will agreed to bring the "Word made flesh," (John 1:14) our Lord and Saviour Jesus Christ into the world. Mary is prefigured as the one who would crush the head of the serpent in Genesis 3:15 through her Divine Son. Still she in no way over shadows him, nor would she ever wish to! Her life in the Gospel years was one of service and great devotion to Jesus, from the cave in Bethlehem where she gave birth to him, to Calvary in Jerusalem where she stood by his cross in his Crucifixion, from Crib to Cross, as it were.

During month, in the churches and individual homes, the most affectionate and fervent homage of prayers and devotions from the hearts of Christians are raised to Mary. Let us join the entire Catholic world in offering special presents to Our Blessed Mother during this month of May. Through pilgrimages, visits to churches dedicated to her, offering little sacrifices in her honour, attentive recitation of the rosary, and many other ways, we can spend this month fruitfully in her company. Let us also encourage our people to come closer to our Blessed Mother by inculcating various Marian devotions!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Circular letter No/GR/14/2019

## <u>ஆயர் சுற்றுமடல்</u>

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

இலங்கையில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்பைத் தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவையோடு சேர்ந்து நமது மறைமாவட்டமும் வன்மையாக கண்டிக்கிறது. குண்டுவெடிப்பில் தம் உயிரை இழந்தவர்களுக்காக செபிப்பதோடு, அவர் தம் குடும்பத்தினருக்கு துக்கலை மறைமாவட்ட இறைமக்கள் அனைவருடையவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வோம்.

இயேசு மானிட மக்களை மீட்பதற்காக இந்த உலகில் தோன்றி பாடுகள் பட்டு சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்தார். அடக்கம் செய்த மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பப்பட்டார். திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவோடு இறந்த நாமும் அவரோடு உயிர்ப்பு நாளில் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையுடன் தேவாலயங்களில் ஒன்றாய் கூடி செபித்த இலங்கை கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை சிதைக்க சதி திட்டம் தீட்டப்பட்ட நாள் உயிர்ப்பு திருநாள், ஏப்ரல் 21, 2019.

இலங்கையில் உயிர்ப்பு திருவிழா அன்று ஆறு இடங்களில் காலை 8.45 மணிக்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இவை அனைத்தும் மக்கள் ஏராளமாக கூடுகின்ற இடங்களை மையப்படுத்தியதாக அமைந்திருந்தன. அவ்வாறு கொழும்பு நகரைச் சுற்றி அமைந்துள்ள மூன்று மிகப்பெரிய தேவாலயங்களில் (புனித அந்தோனியார் ஆலயம் கொழும்பு, புனித செபஸ்தியார்

ஆலயம் நெகோம்போ மற்றும் பத்திகாலோயாவில் அமைந்துள்ள ஆலயம்) உயிர்ப்பு திருச்சடங்குகள் நிறைவேறும் காலை வேளையில் இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. அவ்வாறே மூன்று உயர்ரக தங்கும் விடுதிகளிலும் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் அறிக்கையின்படி இப்படுகொலையில் 359 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுள் 45 குழந்தைகளும், மூன்று காவல் துறையினரும், 38 வெளிநாட்டவரும் (அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், பிரிட்டன், சைனா, தனிஸ், டச்சு, இந்தியா, ஜப்பான், போர்ச்சுக்கீசு, சவுதி அரேபியா மற்றும் துருக்கி) அடங்குவர். நூற்றுக்கணக்கான அப்பாவிகள் படுகாயமடைந்துள்ளனர். இதற்கு காரணமானோர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பைப் சேர்ந்தவர்கள் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. இலங்கையில் எங்கு பார்த்தாலும் மனித சடலங்களும் மரண ஓலங்களும். இவற்றை எண்ணும் போதும் ஊடகங்கள் வழி காணும்போதும் மனம் விம்முகிறது.

அமைதியான உயிர்ப்பு திருவிழா நாளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டோர் மீதும் அமைதியாக இறைவேண்டுதலில் ஈடுபட்டோர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இறைவனின் ஆலயங்களையும் அமைதியின் வழியில் இறைவேண்டல் செய்யும் இறைமக்களையும் குறிவைப்போர், எம்மதத்தவராயினும், அவர்கள் விசுவாசம் கொண்டுள்ள இறைவனுக்கு எதிரிகளாகின்றனர்.

ஆண்டவன் அமைத்த அவனியில் என்றும் மாண்புடைய மானிடம் மாண்போடு வாழ, சமயம் என்னும் சத்திய நெறியினைச் சமைத்தனர் சான்றோர்; இதனிடையே, மத வெறியும் இன வெறியும் தீவிரவாதமாய் பயங்கரவாதமாய் மாறி, மனித மதச்சுதந்திரம் என்னும் சமத்துவ தன்மைக்கு உலை வைக்கும் கொலைக்களமாய் இவ்வுலகு மாறியுள்ளமையை இலங்கை சம்பவம் காட்டுகிறது. இச்செயல்கள் மனித நேயமற்ற மிருகத்தனமாய் மாறிப்போயின. இந்நிகழ்வை "காட்டுமிராண்டித்தனம்; கோழைத்தனம்; இரக்கமில்லா அரக்கத்தனம்; ஈரமற்ற இதயம் கொண்ட மிகு கொடியோர் செயல்" எனத் திருத்தந்தை பிரான்சிஸ் கண்ணீர் நிறைந்த கண்களோடு உரையாற்றி வத்திக்கானில் செபித்தார். நாமும் நமது மறைமாவட்டத்தில் இலங்கை படுகொலைக்கு உள்ளான அனைத்து ஆன்மாக்களையும் நினைவு கூர்வதோடு அவர்களது

குடும்பங்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்வோம். அவ்வாறே அவர்களுக்காக ஒரு நாள் சிறப்பு ஆராதனையும் செபமும் நடத்தி அமைதியின் இறைவன் இலங்கை மக்களுக்கு அமைதியும் ஆறுதல் அளிக்க செபிப்போம். கிறிஸ்துவின் சாட்சிகளாய் இறந்த ஆன்மாக்கள் அமைதிக்கு சான்று பகிரவும் அவர் தம் உறவுகள் அமைதியும் ஆறுதலும் பெறவும் கனத்த இதயத்தோடு இறைவனை வேண்டுவோம்.

எனவே மறைக்கல்வி பிள்ளைகளுக்கான விடுமுறை விவிலிய பயிற்சி நடைபெறும் இவ்வாரத்தில் (28 ஏப்ரல் முதல் 5 மே 2019) நமது பங்குகளில் குறைந்தபட்சம் ஒருமணி நேரமாவது சிறப்பு ஆராதனை மற்றும் செபம் நடத்த பங்கு தந்தையையும் பங்கு மக்கள் ஒவ்வொருவரையும் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன். "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:40) என்ற இயேசுவின் மொழிகள் நமது காதுகளில் எப்போதும் முழங்கட்டும். இலங்கை மக்களின் கண்ணீர் துடைக்க செபத்தில் அவர்களோடு இணைவோம்! ஆறுதலின் கரம் அவர்களோடு சேர்ப்போம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

✝ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

ஆயர் இல்லம்

26.04.2019

---

இந்த சுற்றுமடலை 28.04.2019 ஞாயிறு திருப்பலிக்கு இடையே வாசிக்கவும்.



# CATECHISM
# மறைக்கல்வி

> "உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல கடவுளின் வல்லமையே" (1 கொரிந்தியர் 2 : 5)

**விசுவாசப் பயிற்சி விழா**

விசுவாசப் பயிற்சி விழா எல்லா பங்குகளிலும் மிகச் சிறப்பாக நடத்தும் நோக்குடன் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்கு வி.வி.பி. பயிற்சி அளிக்கப்படுகிறது. அவ்வண்ணமாய் இவ்வருடமும் ஆசிரியர்களுக்கான வி.பி.வி பயிற்சிக் கருத்தரங்கு ஏப்ரல் 26, 27 ஆகிய 2 நாட்கள் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது. ஆசிரியர்களுக்கான வி.பி.வி பயிற்சியின் தொடக்க விழாவானது ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் தலைமையில் இறைவணக்கப்பாடலுடன் ஆரம்பமானது. உதவி இயக்குநர் அருட்தந்தை ஷாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் பயிற்சிக்கு வருகை தந்த அருட்தந்தையர்களையும், ஆசிரியர்களையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து குருகுல முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி வி.பி.வி பயிற்சி விழாவை துவங்கி வைத்தார். மேலும் குருகுல முதல்வர் அவர்கள் மாணவர்களுக்கு சிறந்த முறையில் வகுப்புகள் நடத்த வேண்டும் என்று தமது உரையில் வலியுறுத்தினார். தொடர்ந்து திருத்தொண்டர் ரோபின் அவர்கள் இந்த வருட வி.பி.வி பயிற்சி விழாவின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக் கூறினார். அருட்சகோதரி சுஜி அவர்களின் நன்றியுரையுடன் துவக்க விழாவானது இனிதே முடிவுற்றது.

தொடர்ந்து 10.30 முதல் 11.15 வரையிலும், 11.30 முதல் 1.00 மணி வரையிலும் வகுப்புகள் நடைபெற்றன. இடையே தேனீர் இடைவேளை அளிக்கப்பட்டது. மதியம் 1.00 மணிக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. பின்னர் 1.30 முதல் 3.00 மணி வரை ஆடல், பாடல்

பயிற்சியும் விளையாட்டுகளும் நடத்தப்பட்டன.

திருத்தொண்டர் ரோபின், அருட்சகோதரர் மகேஷ் ஆகியோர் தலைமையில் மறைமாவட்ட அருட்சகோதரர்கள் 19 பேரின் ஒத்துழைப்புடன் வி.வி.பி பயிற்சி சரிவரத் திட்ட திட்டமிடப்பட்டு ஆடல், பாடல்கள் மற்றும் விளையாட்டுகளுடன் நடத்தப்பட்டது. சப் ஜீனியர், ஜீனியர், சீனியர், சூப்பர் சீனியர் ஆகிய நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனியே அருட்தந்தையர்கள் டென்சி, ஜான், அருட்சகோதரி கிருபா, அருட்சகோதரர்கள் மகேஷ், சுனில் ஆகியோர் தகுந்த தயாரிப்புடன் வகுப்புகளை நடத்தினர். இந்த வருடம் வி.பி.வி பயிற்சியில் 180 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்குப் பாடநூல், தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**நன்றி**

வி.பி.வி பயிற்சிக்கு வகுப்புகள் நடத்திய அருட்தந்தையர்களுக்கும், அருட் சகோதரர்களுக்கும் நற்செய்தி நிலையத்தின் இதயங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இரண்டாம் பருவத் தேர்வு**

வகுப்பு X, XI, XII ஆகிய மாணவர்களுக்கான 2 ஆம் பருவத் தேர்வு ஏப்ரல் 28 ஞாயிற்றுக்கிழமை அந்தந்த மறைவட்டங்களில் வைத்து மறைவட்ட இயக்குநர் தந்தையர்களின் தலைமையில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெற்றது.

அருட்தந்தை சனில்
பந்திச்சிறக்கல்

இயக்குநர்

---

**ஆயர் இல்ல அதிதூயகம் மந்திரிப்பு**

ஆயர் இல்ல ஆலயத்தின் மதுபகா புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. இதன் மந்திரிப்பு 24 மே அன்று மாலை 6 மணிக்கு ஆயர் அவர்கள தலைமையில் நடைபெற உள்ளது. இதற்காக அரும்பாடு பட்ட அருட்தந்தை தங்கச்சன் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

பிப்ரவரி மாதம் நடைபெற்ற கலைபோட்டிகளின் விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| ஆறுகாணி மறைவட்டம் | | |
| **Story Telling** | **Infant - Boys** | **Infant - Girls** |
| I | Berlin Babu Arukani | Liya Ratheesh Arukani |
| **Speech** | **Child - Boys** | **Child - Girls** |
| I | Abishik Raja SPathukani | Bincy Babu Arukani |
| II | Alan Jose Arukani | Aswini Pathukani |
| **Group Items** | **Infant - Dance** | **Child - Song** |
| I | Arukani | Pathukani |
| II | Pathukani | Arukani |
| நித்திரவிளை மறைவட்டம் | | |
| **Story Telling** | **Infant - Boys** | **Infant - Girls** |
| I | Pradeesh Cheenivilai | Jesmi Cheenivilai |
| II | Abishek Vayalinkarai | Lina S Jessy Varuthattu |
| III | - | Ashima Vayalinkarai |
| **Speech** | **Child - Boys** | **Child - Girls** |
| I | Geo Francis Varuthattu | Saranya Nithravilai |
| II | Maria Crex Nithravilai | Pradeepa Cheenivilai |
| III | Jinesh Munchirai | Ashmi KishoreMunchirai |
| **Group Items** | **Infant - Dance** | **Child - Song** |
| I | Cheenivilai | Varuthattu |
| II | Nithravilai | Cheenivilai |
| III | Munchirai | Nithravilai |
| சூசைபுரம் மறைவட்டம் | | |
| **Story Telling** | **Infant - Boys** | **Infant - Girls** |

| | | |
|---|---|---|
| I | Alen Marsha Pilankarai | Afshika Killiyoor |
| II | Tiju Pallapallam | Lina S Jessy Varuthattu |
| III | Arlin Jerlish Soosaipuram | Ashima Vayalinkarai |
| **Speech** | **Child - Boys** | **Child - Girls** |
| I | Jeshwin Soosaipuram | Asina Reru Soosaipuram |
| II | Aslin Jino Killiyoor | Angelin Pallapallam |
| III | Risanth Mankarai | Riya Joseph Soosaipuram |
| **Group Items** | **Infant - Dance** | **Child - Song** |
| I | Mankarai | Killiyoor |
| II | Soosaipuram | Pallapallam |
| III | Killiyoor | Soosaipuram |
| மஞ்சாலுமூடு மறைவட்டம் | | |
| **Story Telling** | **Infant - Boys** | **Infant - Girls** |
| I | Jenifta Manjalumoodu | Anshiya Muzhucode |
| II | Shan Kumar Malaicode | Merlin Mukkouttukal |
| III | Alan Muzhucode | Asmitha Manjalumoodu |
| **Speech** | **Child - Boys** | **Child - Girls** |
| I | Jan David Manjalumoodu | Afflin Mukkouttukal |
| II | Shana Mukkouttukal | Anushka Manjalumoodu |
| III | Aswanth Muzhucode | Ashini Karode |
| **Group Items** | **Infant - Dance** | **Child - Song** |
| I | Malaicode | Kaliyal |
| II | Manjalumoodu | Manjalumoodu |
| III | Mukkouttukal | Malaicode |
| படந்தாலுமூடு மறைவட்டம் | | |
| **Story Telling** | **Infant - Boys** | **Infant - Girls** |
| I | Andrish Thettiyode | Hanna Padanthalumoodu |
| II | Eash Athencode | Angela Thettiyode |
| III | Renik Kazhuvanthittai | Nesheera Athencode |

| Speech | Child - Boys | Child - Girls |
|---|---|---|
| I | Jehan Thettiyode | Jaina Thettiyode |
| II | Snibin Annikarai | Dharshiya Athencode |
| III | Siju Padanthalumoodu | Padanthalumoodu |
| **Group Items** | **Infant - Dance** | **Child - Song** |
| I | Annikarai | Kazhuvanthittai |
| II | Athencode | Annikarai |
| III | Thettiyode | Athencode |
| தக்கலை-பிலாங்காலை மறைவட்டம் | | |
| **Story Telling** | **Infant - Boys** | **Infant - Girls** |
| I | Aslin Jeel Paraicode | Jomna Thuckalay |
| II | Chris Martin Nagercoil | Jebinisha Kaisalavilai |
| III | Delvin Kaisalavilai | Evina Harsini Pilankalai |
| **Speech** | **Child - Boys** | **Child - Girls** |
| I | Jan David Manjalumoodu | Anushiya Paraicode |
| II | Ajay Paraicode | Reshma Thuckalay |
| III | Rithick Roshan Kattathrai | Anushiya Kalluvilai |
| **Group Items** | **Infant - Dance** | **Child - Song** |
| I | Kaisalavilai | Nagercoil |
| II | Pilankalai | Kattathrai |
| III | Kattathrai | Paraicode |

அருட்தந்தை ஜோமோன் இயக்குநர்

---

## தற்காலிக இல்லம் மந்திரிப்பு

திருக்குடும்ப துறவற சபையின்(HFC) மூன்று அருட்சகோதரிகள் பல்வேறு இடங்களில் தங்கி மறைமாவட்டத்தில் பணியாற்றி வருகின்றனர். தற்காலிகமாக காமராஜ் நகர் பகுதியில் உள்ள மறைமாவட்ட கட்டிடத்தில் மூவரும் தங்கி நின்று பணியாற்ற அக்கட்டிடத்தை வழங்கியுள்ளது. இந்த அருட்சகோதரிகளின் இல்ல மந்திரிப்பு 20 மே அன்று நடைபெறும்.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## குருசுமலை திருப்பயணம்

05.04.2019 வெள்ளிக்கிழமை அன்று மதியம் 2.00 மணியளவில் இளைஞர் இயக்கம் சார்பாக ஆறுகாணி மறைவட்ட ஆலயத்திலிருந்து குருசுமலையின்





உச்சி நோக்கி திருப்பயணம் ஆரம்பமானது. இதில் இளைஞர் இயக்க அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் பங்கேற்றார். ஆறுகாணி பங்குதந்தை டோபின், அருட்கன்னியர்கள், இளையோர்கள், பங்குமக்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர். சுமார் 4.00 மணியளவில் மலை உச்சியில் அருட்தந்தை டோபின் அவர்கள் தலைமையில் திருப்பலியும், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் மறையுரையும் நடந்தது.

## தவக்கால தியானம்

07.04.2019 அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து இளையோருக்கான ஒருநாள் தவக்கால தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை சகோ. வின்னி மற்றும் சகோ. நிக்கோலஸ் ஆகியோர் வழிநடத்தினர். காலை 9.30 மணியளவில் செபமாலையுடன் தியானம் ஆரம்பமானது. பின்னர் சகோதரர்கள் இறை உரை மற்றும் பாடல்

மூலமாக இறை வார்த்தையை பகிர்ந்தளித்தார்கள். மதியம் 12.00 மணியளவில் ஒப்புரவு அருட்சாதனம் அருட்தந்தையர்களால் வழங்கப்பட்டது. மதியம் 2.00 மணியளவில் சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்களின் இறுதி ஆசீருடன் தியானமானது இனிதே நிறைவுபெற்றது.

ஆபேல்

இளையோர்களின் திறமையை வெளிக்கொணரவும், சகோதரத்துவத்தை பலப்படுத்தவும், ஒற்றுமையாக உறுதிப்படுத்தவும், திருச்சபையின் தூண்களாக மாற்றிடவும்'ஆபேல்' நான் என் சகோதரனின்/சகோதிரியின் காவலாளி என்ற கருத்தை மையமாகக் கொண்டு இளையோர் மாநாடு, ஜூன் 7 முதல் 9 வரையிலான தேதிகளில் கருங்கல் தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடத்தப்பட உள்ளது.

பபிஷா
செயலர்

| வரவிருக்கும் நிகழ்வுகள் - மே 2019 | |
|---|---|
| 28 ஏப்ரல் - 19 மே | ஆயரின் வெளிநாட்டுப்பயணம் அயர்லாந்து, இங்கிலாந்து நாடுகள் |
| 20 மே | CHF அருட்சகோதரிகள் இல்லம் மந்திரிப்பு காமாராஜநகர் |
| 23 மே | அருட்பணியாளர் கூடுகை |
| 24 மே | ஆயர் இல்ல மதுபகா மந்திரிப்பு |
| 27 மே | சாவறா மாகாணமாக உயர்த்தப்பட்டதன் நன்றியறிதல் திருப்பலி |
| 28 மே | SABS அருட்சகோதரிகள் இல்லம் மந்திரிப்பு மார்த்தாண்டம் |
| 29 மே | வட்டகோட்டை அருட்சகோதரி மேரி மேத்யூ அவர்களின் வெள்ளிவிழா |

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக்

**வாழ்க்கை வழிகாட்டி முகாம்**

தக்கலை மறைமாவட்டம் ஏப்ரல் மாதம் இறையழைத்தல் மாதமாகக் கொண்டாடுவதால் அதன் துவக்கவிழா ஒவ்வொரு பங்கிலும் 31.03.2019 காலை திருப்பலியோடிணைந்து மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 07.04.2019 மற்றும் 14 .04.2019 ஆகிய இரண்டு நாட்கள் இறையழைத்தல் கருத்தரங்கு, அதாவது வாழ்க்கை வழிகாட்டி முகாம் நடைபெற்றது.

**இறையழைத்தல் கருத்தரங்கு**

சூசைபுரம், தக்கலை -பிலாங்காலை மறைவட்ட ஆண்களுக்கான இறையழைத்தல் கருத்தரங்கு 07.04.2019 அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரசா ஆலயத்தில் மதியம் 2 மணி முதல் 4 மணிவரை நடைபெற்றது. அந்நிகழ்வை மிஷன்லீக் இயக்குநர் அருட்தந்தை ஜாண்ஜோசப் அவர்கள் ஜெபித்து துவங்கி வைக்க, அருட்சகோதரர் மகேஷ் அவர்கள் வழிநடத்தினார்.

நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்ட கருத்தரங்கு படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை அருட்தந்தை சனில் அருட்தந்தை றோபின்ஸ் ஆகியோர் துவக்கி வைக்க அருட்சோதரர் ரோபின் ஜார்ஜ் வழி நடத்தினார்.

ஆறுகாணி, மஞ்சாலுமூடு மறைவட்ட கருத்தரங்கு முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் அருட்தந்தை ஜோஷி அவர்கள் துவக்கி வைக்க அருட்தந்தை ஸ்டீபன் அவர்களால் வழிநடத்தப்பட்டது.

**பெண்களுக்கான கருத்தரங்கு**

14.04.2019 அன்று பெண்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. சூசைபுரம், தக்கலை-பிலாங்காலை மறைவட்ட கருத்தரங்கு சூசைபுரம் புனித சூசைப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்தந்தை விஜின் அவர்கள் வழி நடத்தினார்கள்.

நித்திரவிளை படந்தாலுமூடு மறைவட்ட கருத்தரங்கு படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் அருட்தந்தை ஆல்பர்ட் அவர்களால் வழிநடத்தப்பட்டது.

ஆறுகாணி, மஞ்சாலுமூடு மறைவட்ட கருத்தரங்கு மஞ் சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலயத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஸ்டீபன் அவர்கள். வழிநடத்தினார்.

கருத்தரங்குகள் நவீன உலகில் ஆன்மீகம், இதற்கு தடையான தடைகற்கள் எவை? எவ்வாறு அத்தடைகற்களை மாற்றி, தாங்களும் கிறிஸ்துவுக்கு சான்று பகர முடியும்? என்ற மையசிந்தனையில் அமைந்தன. நன்னெறி வாழ்வு பற்றியும் கருத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வகுப்பின் இறுதியில் வினாத்தாள் ஒன்று கொடுக்கப்பட்டு மாணவர்களிடமிருந்து கருத்துக்கள் கேட்டறியப்பட்டது. 150 மாணவ மாணவிகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர். பல்வேறு பெண் துறவறச் சமூகத்தைச் சார்ந்த அருட்சகோதரிகள் தங்கள் சபையின் தோற்றம், வளர்ச்சி ஆற்றும் சேவை பற்றி எடுத்துக்கூறினர்.

**இறையழைத்தல் முகாம்**

2019 ஏப்ரல் 25 முதல் 28 ம் தேதி வரை இறையழைத்தல் முகாம் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது.

இவ் வாழ்க்கை வழிகாட்டி முகாமில் கலந்துக் கொண்டு பயன்பெற்ற பிள்ளைகளை வாழ்த்துகிறோம். நிகழ்வை ஒருங்கிணைக்கவும் நடத்தவும் ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து அருட்தந்தையருக்கும் அருட்சகோதரிகளுக்கும் நன்றி நவில்கிறோம்.

அருட்தந்தை ஜான் ஜோசப்

இயக்குநர்

**மறைமாவட்ட வெள்ளிவிழா தொடக்கம் (1996-2021)**

நம்முடைய மறைமாவட்டம் 2021 ஆம் ஆண்டில் வெள்ளிவிழாவை எட்டுகிறது. அருட்தந்தையரின் மறைமாவட்ட மற்றும் மறைவட்ட கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி மூன்றாண்டுகளாக நீண்ட வெள்ளிவிழா நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட உள்ளன. இதன் முதல் நிகழ்வு ஜூன் 30 அன்று பங்களவில் நடக்க இருக்கிறது. பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் வெள்ளிவிழா குழுவினர் மூன்றாண்டிற்கான பல்வேறு நிகழ்வுகளை திட்டமிட்டு வருகின்றனர்.




## தக்கலை மத்திய சபை

**கல்வி திட்ட உதவி வழங்கும் விழா**

தக்கலை மத்திய பேரவையின் கல்வி திட்ட உதவி வழங்கும் விழாவானது 07.04.2019 அன்று உத்திரங்கோடு ஒசாணம் உயர் கல்வி பயிற்சி அரங்கத்தில் வைத்து மதியம் 2.00 மணியளவில் நடைபெற்றது.

விழாவின் தொடக்க நிகழ்வாக பிலாங்காலை வட்டார சபை இளைஞர்களால் இறை வணக்கப் பாடல் பாடப்பட்டது. தொடர்ந்து மத்திய சபை தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதனைத் தொடர்ந்து மத்திய சபை துணைத் தலைவர் சகோ. சவுந்தரராஜன் அவர்கள் தேர்தல் விழிப்புணர்வு பற்றி பேசினார். தொடர்ந்து மத்திய சபை ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் திட்ட உதவி வழங்கி அனைத்து மாணவ மாணவிகளையும் வாழ்த்திப் பேசினார். பின் மத்திய சபை கல்வி திட்ட உதவி அலுவலர் சகோ. ஷாஜி அவர்கள் நன்றியுரை கூற கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

**வின்செந்திய புனித பயணம் - ராஜாவூர்**

சூசைபுரம் வட்டார சபையின் கீழ் செயல்பட்டு வரும் தக்காளிவிளை திருக்குடும்பம் வின்செந்திய கிளைச்சபை சார்பில் 13.04.2019 அன்று ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் வின்சென்ட் தே பவுல் உறுப்பினர்கள், அருட்சகோதரி லீமா ஆகியோர் இணைந்து மன நோயாளிகளை சந்திக்கவும், ஏழைகளுக்கு உணவு வழங்கவும் ராஜாவூர் திருத்தலத்திற்குப் பயணம் மேற்கொண்டனர்.

காலை 8.00 மணிக்கு ராஜாவூர் அடைந்த பின்னர் அருட்தந்தையும் அருட்சகோதரியும் இணைந்து நோயாளிகளுக்காக ஜெபித்தனர். வின்செந்தியர்கள் அனைவரும் இணைந்து 700 நபர்களுக்கு உணவளிக்கும் நோக்கத்தில் சமையல் செய்து மதியம் 1.00

மணியளவில் அனைவருக்கும் வழங்கினார்கள். பிற்பகல் 3.00 மணிக்கு வின்செந்தியர் அனைவரும் சேர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அன்றைய தினம் அனைவருக்கும் ஒரு இனிய அனுபவமாக இருந்தது.

அனைத்து நிகழ்வுகளையும் வட்டாரச் சபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் அவர்கள் முன்னின்று வழி நடத்தினார். ஆண்கள் வின்சென்ட் தே பவுல் சபை தலைவர் சகோ. செல்வராஜ் மற்றும் பெண்கள் கிளைச்சபை தலைவி சகோ. ரோஸ்மேரி அவர்களும் உடனிருந்து அனைத்து நிகழ்வுகளிலும் தேவையான உதவிகளை ஆக்க பூர்வமாக செய்திருந்தனர்.

சகோ. ஷாஜன்
செய்தித்தொடர்பாளர்

| BIRTHDAY | MAY |
|---|---|
| Rev. Fr. Tobin Alappurackal | 02 |
| Rev. Fr. Subin Puthenpurackal | 04 |
| Rev. Fr. Augustine Thotaniyil CMI | 05 |
| Rev. Fr. Davis Karukappally CMI | 10 |
| Rev. Fr. John Paul Puthuvalputhen | 17 |
| Rev. Fr. Thomas Pockavarayath CMI | 20 |
| Rev. Fr. Thankachen Joseph SDB | 22 |
| Rev. Fr. Ginoy Thottiyil | 24 |
| Rev. Fr. Jiji Koipuram | 25 |
| Rev. Fr. Robin Koorumullil | 25 |
| Rev. Fr. Christudas M | 28 |
| Rev. Fr. Tinu Kottackaparampil CMI | 29 |
| Rev. Fr. John Joseph | 31 |
| **FEAST DAY** | **MAY** |
| Rev. Fr. Alex Puthettu | 03 |



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

## மதுஅடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் அளிக்கப்பட்டு வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கள்கிழமைகளில் மதியம் 12.30 மணியளவில் மன நல மருத்துவர் வருகை புரிகிறார். மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம். இம்மையத்திலிருந்து சிகிட்சை பெற்றபலர்நலமடைந்துள்ளனர். இம்மையம் இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அடிகளார் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

## திருமண பயிற்சி வகுப்பு

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கொருமுறை ஒரு முறை மூன்றாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் நடைபெறுகின்றது. இம்முறை ஏப்ரல் மாதத்தில் 05, 06, 07 ஆகிய மூன்று நாட்கள் சங்கமத்தில் வைத்து சிறப்புப் பயிற்சி நடைபெற்றது. 25 இளையோர்கள் இப்ப யிற்சியில் பங்கெடுத்தனர். பயிற்சியின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெற்றது. அடுத்த வகுப்பு ஜூன் மாதம் மூன்றாவது வாரம் நடைபெறும். பயிற்சி கட்டணம் ரூ. 750 ஆகும்.

## சிறப்புக் கூட்டம் - முழுக்கோடு

மறைமாவட்ட குடும்ப நலக்குழு முழுக்கோடு பங்கைச் சேர்ந்த அனைத்துக் குடும்பங்களையும் சந்தித்ததின் நிறைவாக, 23.08.2019 அன்று மாலை 5.45 மணியளவில் பங்கு மக்கள் அனைவரும் பங்கேற்ற சிறப்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பங்குதந்தை சாக்கோ ஆக்காத்தறா அவர்கள் தலைமையேற்றார்கள். இல்வாழ்வு இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் மற்றும் ஒருங்கிணைப்பாளர்

Sr. மேரி ஜாய்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். Sr. மேரி ஜாய்ஸ் அவர்கள் குடும்பங்களில் பெற்றோரின் பங்கு மற்றும் வளரிளம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்தார்.

இயக்குநர் பேசுகையில் கணவன், மனைவியிடையே விட்டுக் கொடுத்தல், பகிர்தல், அன்பு ஆகிய பண்புகள் நிலவ வேண்டுமென்றும் ஒருவருக்கொருவரிடையே உள்ள குறைகளை ஏற்றுப் பொறுத்துக் கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டுமென்றும் ஒவ்வொரு குடும்பமும் காட்டு முந்திரியாக மாறாமல் நல்ல முந்திரித் தோட்டமாக மாற வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். இறுதியில் நன்றிப் பாடலுடன் சுமார் 9.00 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

அருட்தந்தை அஜீஷ்

இயக்குநர்

---

# சீனாய் தியான இல்லம்

| மே மாதம் நடைபெற இருக்கும் சிறப்பு தியானங்கள் | | |
|---|---|---|
| கண்விழிப்பு ஆராதனை | மே 10<br>வெள்ளிக்கிழமை<br>இரவு 9.00 மணி முதல்<br>காலை 5.30 மணி வரை | வழிநடத்துவோர்<br>சீனாய்<br>தியானக்குழுவினர் |
| ஜெபமாலை ஜெப ஆசீர்வாத தியானம் | மே 17<br>வெள்ளிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துவோர்<br>சீனாய்<br>தியானக்குழுவினர் |
| குடும்ப ஆசீர்வாத தியானம் | மே 25<br>சனிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துவோர்<br>சீனாய்<br>தியானக்குழுவினர் |

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்

இயக்குநர்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

## கோழி வளர்த்தல்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் கோழி வளர்த்தல் முறைப் பற்றிய ஒரு நாள் பயிற்சி முகாம் கல்லுவிளை அரங்கத்தில் வைத்து ஏப்ரல் 12 ஆம் தேதி நடைபெற்றது. இதற்கு KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் தலைமை வகித்தார். பயற்சியின் இறுதியில் அருட்தந்தை பேசும் போது, வீட்டில் இருந்தவாறே கோழி வளர்க்கும் தொழிலை மிக எளிமையாகச் செய்யலாம் எனக் கூறினார். மேலும் அவர், இச்சிறுதொழிலை நடத்த அனைவரும் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சிறப்பு விருந்தினர்

கோழி வளர்த்தல் குறித்த பயிற்சியை மத்திய விலங்குகள் பல்கலைக்கழக பேராசியர் மருத்தவர் வேல்முருகன் அவர்கள் அளித்தார்கள். கோழி வளர்த்தல் ஒரு கலை எனக் கூறிய அவர், முறையாக திட்டமிட்டு அதை நடத்தினால் பெரும் லாபம் ஈட்டலாம் என்றார். கோழிக்குஞ்சுகளைத் தேரந்தெடுத்தல், உணவு கொடுத்தல், உணவு வகைகளைத் தேர்வு செய்தல், கோழிகளின் வயதைக் கண்டறிதல், ஆந்திராஸ் மற்றும் இரத்தக் கழிச்சல் போன்ற நோய்களைக் கண்டறிந்து தடுப்பூசிகளைப் போடுதல் போன்றவற்றில் கவனம் செலுத்த அவர் பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில் 35 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்

இயக்குநர்

### ஆயர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம்

ஆயர் அவர்கள் மறைமாவட்ட மறைபணி தேவைகளுக்காக ஐக்கிய அரபு மற்றும் அயர்லாந்து நாட்டில் பணியாற்றும் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் நண்பர்களை சந்திக்க ஏப்ரல் 28 அன்று சென்றார். மே மாதம் 19 அன்று மறைமாவட்டம் திரும்புகின்றார்.

# அருட்சகோதரர்களிடமிருந்து...




## குருத்துவ அருட்பொழிவுக்கு முந்தைய சிறு பட்டங்கள்

இவ்வாண்டு அருட்சகோதரர்கள் அஜின், லிஜு, பிரின்ஸ் ஜார்ஜ், ஜார்ஜ் குட்டி, ஷிஜின்



தேவ் ஆகியோர் ஏப்ரல் 15 அன்று காலை 7 மணியளவில் சங்கமத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் திருஉடை பெற்றுக்கொண்டனர்.

### காறோயாப் பட்டம்

அருட்சகோதரர்கள் மகேஷ் மற்றும் ஜோஸ்மோன் ஆகியோர் காறோயா அருட்பொழிவு பெற்றனர்.

### திருத்தொண்டராக..

ஏப்ரல் 15 அன்று மாலை 6 மணிக்கு மாறப்பாடி தூய தோமையார் ஆலயத்தில் வைத்து அருட்சகோதரர்கள் டோஜி மற்றும் ரோபின் ஜோஸ் ஆகியோர் திருத்தொண்டர்களாக அருட்பொழிவு செய்யப்பட்டனர்.

### குருத்துவ அருட்பொழிவு

திருத்தொண்டர் அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு ஏப்ரல் 24 அன்று முழுக்கோடு தூய தோமையார் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு தொடங்கிய இத்திருவழிபாட்டை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். மறையுரையை, மார்த்தாண்டம் மலங்கரை மறைமாவட்ட ஆயர்





வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் வழங்கினார்கள். திருவழிபாட்டில் பங்கேற்ற அனைவரும் புதிய குருவின் கரங்களை முத்தமிட்டு ஆசிபெற்றதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

**களப்பணி முகாம்**

உயர் குருமட அருட்சகோதரர்களின் விடுமுறைகால களப்பணி முகாம் ஏப்ரல் 8 முதல் 12 வரை குமாரகோவிலில் நடைபெற்றது.

ஏப்ரல் 13 முதல் 21 வரை புனித வார நிகழ்வுகளுக்கு உதவி செய்ய பல்வேறு பங்குகளுக்கு அனுப்பப்பட்டனர். தொடர்ந்து மே 13 வரை பங்குகளில் நடைபெறும் விசுவாசப் பயிற்சி விழா நிகழ்வுகளைத் தலைமையேற்று நடத்துவார்கள்.

இவ்வாண்டு 5 அருட்சகோதரர்கள் உயர் குருத்துவக் கல்லூரிகளில் மெய்யியல் கல்வி பயில உள்ளனர். நான்கு அருட்சகோதரர்கள் மேய்ப்புப்பணி அனுபவம் பெறும் பொருட்டு உஜ்ஜயின் குருத்துவக் கல்லூரிக்கு செல்லவிருக்கின்றனர். .

**இன்ப சுற்றுலா**

அருட்சகோதரர்களின் இன்பச் சுற்றுலா ஏப்ரல் 22 அன்று நடைபெற்றது. பூவாறு, கொல்லம் ஆகிய பகுதிகளுக்கு சென்று மகிழ்ந்தனர்.

**புதிய தலைவர்**

அருட்சகோதரர்களின் புதிய தலைவராக அருட்சகோதரர் ஜோஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுவரை தலைவராக செயல்பட்ட அருட்சகோதரர் ரோபின் அவர்களுக்கு நன்றி.

**ஓராண்டு களப்பணி**

களப்பணி மேற்கொள்ள இருக்கின்ற இருவர் கல்லூரியில் வணிகவியலில் இளங்கலைப் பட்டப்படிப்பு மேற்கொள்ள உள்ளனர்.

அருட்சகோதரர்கள் லின்றோமோன் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்திலும், அமன்றோ முக்கூட்டுக்கல் இளங்குருமடத்திலும், ஷான்ஜோமோன்சங்கமத்திலும், டிவின்ராஜ் ஆயர் இல்லத்திலும், ஆல்வின் ஜோஸ் மஞ்சாலுமூடு ஆலயத்திலும் ஏப்ரல் 27 முதல் களப்பணியாற்ற உள்ளனர். பிபின், ஆல்வின்ஜாண் ஆகியோர் சங்ஙனாச்சேரி SB கல்லூரியில் B. Com பயில உள்ளனர்.

அருட்சகோதரர் ஜோஸ்
தலைவர்

# மறைமாவட்ட கல்வி நிறுவனங்கள்

10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளின் பொதுத்தேர்வு முடிவுகள் கடந்த மாதம் வெளியாயின. நமது மறைமாவட்ட பள்ளிகள் சிறந்த மதிப்பெண் பெற்று சாதனை படைத்தன. பெருவாரியான பள்ளிகள் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளன. இதற்காக உழைத்த தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியருக்கும் ஒத்துழைப்புக் கொடுத்த பெற்றோருக்கும் நன்றி செலுத்துகிறோம். வெற்றி பெற்ற அனைத்து மாணவர் மாணவியரை வாழ்த்துகிறோம்.

பொதுத்தேர்வு முடிவுகள் விவரம் பின்வருமாறு

| CLASS 12 RESULTS | | | |
|---|---|---|---|
| NAME | APPEARED | PASSED | HIGHEST |
| Alphonsa, Nagercoil | 268 | 268 | 578 |
| Sacred Heart, Padanthalumoodu | 97 | 97 | 556 |
| St. Joseph's Matric, Panpoli MCBS | 99 | 99 | 545 |
| APJM HSS, Soosaipuram | 80 | 79 | 559 |
| St. Mary's, Kaliyal CMI | 194 | 191 | 565 |
| Carmel Matha, Kanyakumari CMC | 30 | 30 | 487 |
| Holy Family, Mukkootukal | 67 | 67 | 539 |
| Sacred Hear HSS, Kazhuvanthittai | 26 | 26 | 521 |
| St. Michael Matric, Kattathurai | 54 | 54 | 539 |
| Carmel Jyothi Matric, Colachal | 35 | 35 | 466 |

| CLASS 10 RESULTS | | | |
|---|---|---|---|
| John Paul II Kulasekaram - SABS | 48 | 48 | 482 |
| St. Alphonsa, Nagercoil | 225 | 225 | 494 |
| St. Michael's, Kattathurai - FCC | 73 | 73 | 480 |

| | | | |
|---|---|---|---|
| Jaya Matha, Christurajapuram | 56 | 56 | 474 |
| Sacred Heart, Padanthalumoodu | 150 | 150 | 479 |
| APJM HSS, Soosaipuram | 111 | 111 | 484 |
| St. Joeph's School, Panpoli -MCBS | 113 | 113 | 489 |
| Carmel Matha, Kanyakumari-CMC | 77 | 77 | 480 |
| Carmel Jyothi, Colechal - CMC | 69 | 68 | 474 |
| Mount Carmel, Muzhucode - CMC | 55 | 55 | 479 |
| Mar M. Kavukatt, Varuthattu | 44 | 44 | 449 |
| St. James High School, Mankarai | 69 | 69 | 469 |
| Holy Family, Mukkootukal | 52 | 51 | 440 |
| St Joseph's Pilankalai -CMI | 34 | 33 | 447 |
| St. Mary's, Kaliyal - CMI | 133 | 131 | 467 |
| St Thomas, Netta - CMI | 25 | 23 | 430 |
| Holy Family HS Arukany | 30 | 30 | 377 |
| Sacred Hear HSS, Kazhuvanthittai | 42 | 42 | 482 |

அருட்தந்தை ஜோண்சிலால்

இயக்குநர்

## இளையோர் மாநாடு 2019, ஜூன் 7-9

### ஆபேல் நான் என் சகோதரியின் சகோதரனின் காவலாளி

இளையோர் மாநாடு 2019, ஜூன் மாதம் 7 முதல் 9 வரை சூசைபுரம் தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெறுகிறது. இம்மாநாட்டின் இறுதித் திருப்பலியும் கலைநிகழ்ச்சிகளும் 9 ஆம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்கி இரவு 9 மணி வரை நடைபெற உள்ளது. அனைத்து அருட்தந்தையர்களும் அருட்கன்னியர்களும் இறைமக்களும் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள்.

# புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

### வாழ்க்கை வழிகாட்டி முகாம்

12 ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மறைமாவட்ட மாணவர்களுக்கான அரைநாள் வாழ்க்கை வழிகாட்டி முகாம் ஏப்ரல் 15 ஆம் தேதி, தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடத்தப்பட்டது. மாணவர்கள், புனித அல்போன்சா கல்லூரி கொண்டிருக்கும் வசதிகளைக் குறித்து கண்டறிய சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கல்லூரி தாளாளர் அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.

### பட்டமளிப்புவிழா

ஏப்ரல் 5 ஆம் நாள் கல்லூரியின் இரண்டாமாண்டு பட்டமளிப்புவிழா நடைபெற்றது. மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் பிச்சுமணி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். பல்கலைக் கழக தரவரிசைப் பட்டியலில் தமிழ் மொழிப் பாடத்தில் ஒன்பது மற்றும் இருபதாவது இடத்தையும், ஆங்கில மொழிப் பாடத்தில் பதினேழாவது இடத்தையும் மாணவர்கள் பெற்று சாதனை படைத்தனர்.

### ஒருநாள் தியானம்

ஏப்ரல் 6 - ம் தேதி கல்லூரி மாணவர்களின்



ஆன்மீகத்தை மேம்படுத்தும் வகையில் ஒருநாள் தியானம் நடைபெற்றது. கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இத்தியானத்தை அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் தலைமையிலான குழு ஒருங்கிணைத்து நடத்தியது.

### ஐந்தாவது ஆண்டுவிழா

ஏப்ரல் 8 - ம் தேதி கல்லூரியின் ஐந்தாவது ஆண்டுவிழா நடைபெற்றது. இந்திய அரசின் விண்வெளித்துறை முன்னாள் செயலரும், விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான முனைவர் மாதவன் நாயர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். கல்லூரியின் புரவலர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரியின் இளம் படைப்பாளர்கள் இருவரின் நூற்கள் வெளியிடப்பட்டன. முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் முழு வருகை பதிவு உள்ள மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் பல்சுவை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### பிரிவு உபச்சார விழா

ஏப்ரல் 13 - ம் ஆம் தேதி மூன்றாமாண்டு மாணவர்களுக்கான பிரிவு உபச்சார விழா துறை வாரியாக நடத்தப்பட்டன. இறுதியாக கல்லூரித் தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் மாணவர்களை வாழ்த்தி பல்கலைக் கழகத் தேர்விற்காக தயாராகும் மாணவர்களுக்காக இறைவேண்டல் செய்து ஆசிவழங்கினார்.

ஏப்ரல் 21 ஆம் தேதி முதல் 2019-2020 ஆம் கல்வியாண்டிற்கான சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அருட்தந்தை ஆன்றணி ஜோஸ்
தாளாளர்

---

**சி.எம்.சி சாவறா துணை மாகாணம் மாகாணமாக..**

தக்கலை சி.எம்.சி சாவறா துணை மாகாணம் தற்போது மாகாணமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் நன்றியறிதல் திருப்பலி மே 27 அன்று தக்கலை சி.எம்.சி அருட்சகோதரிகள் இல்லத்தில் நடைபெறும்.

# மறைவட்ட செய்திகள்




## சூசைபுரம் மறைவட்டம்

### சூசைபுரம்

* சாம்பல் திங்கள் திருச்சடங்கை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் நிறைவேற்றினார். தவக்காலத்தின் பகுதியாக, ஏப்ரல் 8 முதல் 12 வரை இரவு விழிப்பு செபங்கள் நடைபெற்றன.

* ஓசானா ஞாயிறன்று நடைபெறும் திருவழிபாடுகளின் பகுதியான குருத்தோலை பவனி புனித அல்போன்சா கல்லூரியில் தொடங்கி காட்டுக்கடை வழியாக ஆலயம் வந்தடைந்தது. அன்றைய தினம் வாக்கு அளிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றியும், மக்களைவைத் தேர்தலில் திருச்சபை தன்னை எப்படி வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

* பெசகா வியாழனன்று மாலை 6.00 மணிக்கு திருப்பலியும் பாதம் கழுவுதல் திருச்சடங்கும் ஆராதனையும் அப்பம் முறித்தலும் நடைபெற்றது.

* வெள்ளி காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திருமணி ஆராதனை நடத்தப்பட்டது. இயேசுவின் பாடுகள் குறித்த வாசிப்பும் தியானமும் நடத்தப்பட்டு நற்கருணைப் பகிர்வும் நடத்தப்பட்டது. இறுதியில் திருச்சிலுவைப்பாதை காட்டுக்கடை, வெள்ளியாவிளை வழியாக ஆலயம் வந்தடைந்தது.

* உயிர்ப்பு திருநாள் ஞாயிறு அதிகாலை 3.00 மணிக்கு நடைபெற்றது. திருப்பலியின் இறுதியில் முட்டை வழங்கப்பட்டது.

### இறையழைத்தல் கருத்தரங்கு

14.04.2019 அன்று சூசைபுரம், தக்கலை பிலாங்காலை மறைவட்ட மாணவ மாணவிகளுக்கான அரைநாள் இறையழைத்தல் கருத்தரங்கு நடைபெற்றது.

### பாலப்பள்ளம்

* 06.04.2019 அன்று கிறிஸ்துராஜா ஆங்கிலப்பள்ளி கல்வி மையத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. அருட்தந்தை

ஜோசப் தங்கச்சன் அவர்கள் தலைமையுரை ஆற்றி கலைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அருட்தந்தை பிரின்டோ அவர்கள் அறிக்கை வாசித்தார்.

* 08.04.2019 அன்று அருட்தந்தை பிரின்டோ அவர்களின் பிறந்த நாள் விழா பங்கு சார்பில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

* 14.04.2019 அன்று ஓசானா ஞாயிறு குருத்தோலைப் பவனி கல்லறைத்தோட்டத்தில் ஆரம்பித்து ஆலயம் வந்தடைந்தது.

* 17.04.2019 அன்று பாதம் கழுவுதல் நிகழ்வு, அப்பம் முறித்தல், திருமணி ஆராதனை ஆகியவை நடைபெற்றன.

* 18.04.2019 அன்று காலை 6.00 மணி முதல் உறவியங்கள் சார்பில் திருமணி ஆராதனை நடைபெற்றது.

* 20.04.2019 அன்று 11.00 மணியளவில் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி நடந்தது. உயிர்ப்பு முட்டையும் வழங்கப்பட்டது.

பங்கு பேரவை கூட்டம்

* 14.04.2019 அன்று பங்கு பிரதிநிதி மன்றக் கூட்டமும், 20.04.2019 பங்கு பேரவைக் கூட்டமும் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஆங்கிலவழி மழலையர் பள்ளி தொடர்ந்து நடத்தவும், k.k.s.s ன் மேற்பார்வையில் பங்கு சார்பில் ஆனைக்குழி கட்டிடத்தில் GLOUSE கம்பெனி தொடங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மாங்கரை

* 06.04.2019 அன்று புனித வாரத்தை முன்னிட்டு 15 ஆலயங்களுக்குச் செல்லும் திருப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

* 07.04.2019 அன்று பங்கு பேரவை கூட்டம் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

* 15.04.2019 அன்று மாலை 6.30 மணிக்கு அருட்தந்தை ஜினு அவர்கள் தலைமையில் தியானமும் ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது.

* 17.04.2019 அன்று இயேசுவின் பாடுகளைக் குறித்த காணொளிக் காண்பிக்கப்பட்டு, சிலுவைப் பாதை நடத்தப்பட்டது. சிந்தனைகளை அளித்து செபத்தை பங்குத்தந்தை வழிநடத்தினார்.

* 18.04.2019 அன்று பெசகா வியாழனை முன்னிட்டு பங்கு

மக்கள் இணைந்து ஆலயத்தில் அப்பம் செய்து அனைவருக்கும் வழங்கினர்.

* 18.04.2019 அன்று அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் படுக்கை நோயாளிகளுக்கு வீடுகளில் சென்று நற்கருணை வழங்கினார்.

கிள்ளியூர்

பெயர் கொண்ட திருநாள்

ஏப்ரல் 12 ஆம் தேதி இரவு விழிப்பு செபம் நடத்தப்பட்டது. செபம் இரவு ஒரு மணிக்கு திருப்பலியுடன் நிறைவடைந்தது.

* பங்குதந்தையின் பெயர் கொண்ட விழா 21.03.2019 அன்று ஆலயத்தில் வைத்துக் கொண்டாடப்பட்டது. மேலும் பிறந்த நாள் விழா 03.03.2019 அன்றும் கொண்டாடப்பட்டது. .

* 14.04.2019 அன்று ஒசானா ஞாயிறு பவனி கன்னியர் இல்லத்திலிருந்து தொடங்கி ஆலயத்தில் முடிவடைந்தது.

* 17.04.2019 அன்று பாதம் கழுவுதல் நிகழ்வு, அப்பம் முறித்தல், திருமணி ஆராதனை ஆகியவை நடைபெற்றன.

* 18.04.2019 அன்று காலை 6.00 மணி முதல் உறவியம் சார்பில் தலா ஒருமணி நேர ஆராதனை நடைபெற்றது. சிலுவைப்பாதை கிள்ளியூர் தேவமாதா ஆலயத்திலிருந்துத் தொடங்கி மாதாபுரம் புனித தோமையார் ஆலயத்தில் நிறைவடைந்தது.

* 20.04.2019 அன்று 11.00 மணிக்கு உயிர்ப்பு ஞாயிறு திருப்பலியும் உயிர்ப்பு முட்டையும் வழங்கப்பட்டது.

தேவசகாயம் நல்வாழ்வு மையம்

* 14.04.2019 ஒசானா ஞாயிறு அன்று அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் மாதர்ஜோதிஸ் தாய்மார்கள் மற்றும் வின்சென்ட் தே பவுல் உறுப்பினர்கள், அருட்சகோதரிகள் இணைந்து காரோடு தேவசகாயம் நல்வாழ்வு மையத்தைச் சந்தித்து பண உதவியும், பொருளுதவியும் செய்தனர்.

புனித வாரத்திருப்பயணம்

* 13.04.2019 அன்று புனித வாரத்தை முன்னிட்டு 15 ஆலயங்களுக்குப் புனித திருப்பயணம் சென்றனர்.

* 29.03.2019 அன்று மலையாற்றூர் திருப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

குடுக்கச்சிவிளை

இறையழைத்தல் மாதம்

31.03.2019 அன்று குடுக்கச்சிவிளை பாத்திமா மாதா ஆலயத்தில் இறையழைத்தல் மாதமாக கொண்டாடும் விதத்தில் மறைக்கல்வி மாணவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி இறையழைத்தல் சிறப்பு ஜெபத்தைச் சொன்னார்கள். அருட்தந்தை ஜஸ்டின் சுதீஸ் அவர்கள் தனது சிறப்பான அனுபவ கருத்துக்களை எடுத்துரைத்து ஜெபித்தார்.

## பிலாங்கரை

### ஆயர் திருப்பலி

* 21.04.2019 அன்று ஒசானா ஞாயிறு திருப்பலியை மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நிறைவேற்றினார்கள்.

### பிறந்தநாள் கொண்டாட்டம்

மேதகு ஆயர் அவர்களின் பிறந்தநாள் விழாவை திருப்பலிக்குப் பின் பிலாங்கரை லொரோட்டா அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களும் மற்றும் பங்குமக்கள் அனைவரும் இணைந்து கேக் வெட்டி மிகவும் சிறப்பாக கொண்டாடினர்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### காரோடு - திருவிழா

*புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா 28.04.2019 அன்று மாலை 5.30 மணிக்கு பங்குஅருட்தந்தை ஜேம்ஸ் கானாக்காவில் அவர்கள் தலைமையில் திருக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

* 03.05.2019 அன்று அருட்தந்தை மரிய வின்சென்ட் (இலத்தீன் வழிபாட்டு முறை) அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட உள்ளது. அதன் பிறகு இளையோர் இயக்க அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் இளையோர் இயக்க தலைவர் ஜினோ ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்க இளையோர் இயக்கம் மற்றும் உறவியங்கள் ஆண்டுவிழா இளையோர்கள் முன்னிலையில் அரங்கேற உள்ளது.

* 04.05.2019 அன்று ஆடம்பர கூட்டுத் திருப்பலி மற்றும் திருவிழா பவனி நடைபெறும்.

05.05.2019 அன்று பேரருட்தந்தை ஜேம்ஸ் மங்கலாச்சேரி தலைமையில் இராசா திருப்பலி நடைபெற இருக்கிறது. அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்டு மற்றும் அருட்தந்தை போஜி பறம்பில் பறம்பில் ஆகியோர் இதில் கூட்டாக பங்கேற்பார்கள். திருப்பலிக்குப் பின் அன்பின்

விருந்து நடைபெறும். மாலை 6.00 மணிக்கு பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா நடைபெறும். 06.05.2019 அன்று இறந்தவர்களுக்கான திருப்பலி மற்றும் கல்லறைத் தோட்டம் அர்ச்சிப்பு நிகழ்வுடன் திருவிழா இனிதே நிறைவடையும்.

தகவல்: திருமதி செலின் மேரி|திருமதி ஸ்னேக லதா|திருமதி ஹேமா

## செங்கோட்டை செய்திகள்

### புனித வார வழிபாட்டு நிகழ்வுகள்

புனித வார வழிபாடுகள் அனைத்தும் நன்முறையில் அனைத்து பங்குகளிலும் கொண்டாடப்பட்டன. குறிப்பாக புனித வெள்ளியன்று செங்கோட்டை மறைபரப்பு தளத்திலுள்ள அனைத்து பங்குகளும் ஒன்றிணைந்து புளியரை பங்கிலிருந்து புதூர் பங்கு வரை சிலுவைப் பாதை பயணத்தை மேற்கொண்டன. இம்முறை சிலுவை பாதை நிகழ்வுகளை மிக நன்முறையில் நடித்துக் காட்டினர். இந்நிகழ்வு அனைவரின் உள்ளங்களையும் தொடும் வகையில் நன்முறையில் அமைந்திருந்தது. இதற்கு வழிகாட்டியாக ஒருமாதகாலமாக பயிற்சியளித்து தகுந்த தயாரிப்புகளை நடத்தியவர் அருட்தந்தை செபி அவர்கள் ஆவார். சிலுவைப் பாதையின் இறுதியில் அருட்சகோதரர் ஆல்பின் ஜோஸ் மிகச் சிறப்பாக இறைஇரக்கத்தின் இதயக் கதவு என்னும் கருத்தை மையமாக் கொண்டு மறை உரையாற்றினார். இறுதியில் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# *FINAL LIST OF TRANSFERS – 2019*

| Sl. No. | Name | Current Place | Transferred to | Transfer Effected from | Relieved From the Offices in the Diocese | Current and Additional Appoint ments in the Eparchy |
|---|---|---|---|---|---|---|
| 1. | Fr. ThoMas Powathuparampil | Nagercoil | Bishops House | 30 July 2019 | Correspondent | Proto-Syncellus of the Eparchy, Bishop's House Thuckalay; Manager of English Medium Schools and College; Spiritual Director of St. Vincent de Paul Society; President of Educational Commission |
| 2. | Fr. Kuriakose (Johnsilal) Arackaparambil | Sangamam | Bishop's House | 24 May 2019 | Sangamam Director | Procurator of the Eparchy; Helping Fr. Vinu at Thadikkarakonam for Weekday's Holy Mass; Parish Priest of Christ the King Church Paraicode; Prison Ministry |
| 3. | Fr. Abilash Xavier Raj S. | New Priest | Vayalinkarai | 24 May 2019 | New Priest | Assit. Parish Priest of Vayalinkarai and Amala Maria Church Cheenivilai. Headmaster and Correspondent of St. Mary's English Medium School, Killiyoor |
| 4. | Fr. Antony Jose | Additional Responsibility | | | | Spiritual Director of Legion of Mary (Mariayin Senai) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | Fr. Dominic Anil Raj | Thuckalay | Thettiyode | 24 May 2019 | Parish priest and Pulari Press | Parish Priest of St. Paul's Church Thettiyode; Assit. Director of Sinai Retreat Centre Kalluvilai |
| 6. | Fr. James (Vinod) Kanakalil | Karode | Marappady and Thettivilai | 24 May 2019 | Parish priest and Director of DNN | Parish Priest of St. Thomas Church, Marappady and St. Michael's Church, Thettivilai |
| 7. | Fr. Jipson Chully MBCS | Mekkarai | | 3 July 2019 | Parish priest | MCBS School |
| 8. | Fr. John (Subin Scaria) Puthenpurackal | Padanthal/ Kunnuvilai | Soosaipuram, Thankalivilai, Kudukachivilai | 24 May 2019 | Asstt. Parish Priest | Assit. Parish Priest of St. Joseph's Forane Church and Teacher at APJM School Soosaipuram; Parish Priest of Holy Family Church Thakkalivilai and Fathima Matha Church Kudukachivilai |
| 9. | Fr. John Paul | Shenkottai | Palapallam | 24 May 2019 | Parish Priest, Correspondent and Coordinator of Shenkottai Mission | Parish Priest of Christ the King Church Palapallam; Manager of Gloves Packing Unit at Anakuzhi; Correspondent of Tamil Medium Schools; Secretary of Eparchial Presbyterium |
| 10. | Fr. Jose Vayalail | Additional Responsibility | | 24 May 2019 | PET Teacher Mukkoottukal | Director of Uraviam |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | Fr. Jose Muttath-upadam | VayaliNkarai Cheeni vilai | Nithravilai | 24 May 2019 | Proto-Syncellus of the Eparchy; Parish Priest; Spiritual Director of St. Vincent De Paul and Mariayin Senai | Parish Priest of Jaya Matha Forane Church Nithravilai; Director of Karunai Illam; Director of AIDACT |
| 12. | Fr. Joseph (Dency) Mundunadackal | Pilankarai | Padanthalu-moodu, Kun-nuvilai | 24 May 2019 | Parish priest, Procurator of the Eparchy | Parish Priest of Sacred Heart Church Padanthalumoodu and St. Joseph's Church Kunnuvilai; Correspondent of SH Matriculation School; Director of Liturgical Commission |
| 13. | Fr. Joseph (Jimmy) Thekkekadumathil | Rome | Pilankarai | November 2019 | Studies in Rome | Parish Priest of Loretto Matha Church Pilankarai; Director of Family Apostolate and Counseling at Sinai Retreat Centre Kalluvilai; Director of Drugs and Alcoholic Apostolate |
| 14. | Fr. Joseph (Jinu) Thekkethalackal | Thettiyode | Rome | 24 May 2019 | Parish Priest and Communication | Doctoral Student of Social Communication, Salesian University, Rome |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. | Fr. Joseph (Jomon) Mangalamadam | Marappady, Thettivilai | Munchirai, KII | 24 May 2019 | Parish priest | Parish Priest of St. George Church Munchirai. Director of Kuzhanthai Iso Iyakkam |
| 16. | Fr. Joseph (Prince) Maliyil | - | | | Secretary of Presbyterium | Director of Catechism |
| 17. | Fr. Joseph (Thankachan) Kollappallyil SDB | Mission Procure | Delhi | | Mission Procure, Bishop's House | Back to Province, Delhi |
| 18. | Fr. Joseph Ottalamkal MST | Varuthattu | Annikarai | 24 May 2019 | Parish Priest | Parish Priest of St. Mathew's Church Annikarai |
| 19. | Fr. Joshy Kulathumkal | - | Director of Uraviam | - | | |
| 20. | Fr. Justin Sutheesh | Thakkalivilai, Soosaipuram | Pulari, Shenkottai | 24 May 2019 | Assit. Parish Priest of Soosaipuram, Parish Priest of Thakkalivilai and Kudukkachivilai | Correspondent of Pulari School Shenkottai; Parish Priest of St. Thomas Mission Pudur and Sundarapandiyapuram |
| 21. | Fr. Kurian (Sanil) Panthichirackal | Nithravilai | Alphonsa, Nagercoil | 24 May 2019 | Parish Priest, Forane Vicar, Director of Catechism & AIDACT | Parish Priest of St. Alphonsa Church Nagercoil; Correspondent of St. Alphonsa School Nagercoil |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22. | Fr. Kurian Koipuram | | Shembahatharisu | 24 May 2019 | | Priest in charge of Chembahatharisu Mission; Asst. Parish priest of Arukani and Pathukani |
| 23. | Fr. Peter Kizhakkeyil | Changanassery | Madurai and Theni Mission | 24 May 2019 | | Coordinator of Madurai, Theni, Sivagangai and Virudunagar Mission with residence in Madurai |
| 24. | Fr. Printo Kurias | Palapallam | Varuthattu | 24 May 2019 | Parish priest; Assit. Director of Sinai Retreat Centre | Parish Priest of St. Xavier's Church Varuthattu; Director of Safe Environment of Minor and Vulnerable Women Commission and Student of LLB and LLM |
| 25. | Fr. Philip (Alex) Puthettu | Tirunelveli | Nanguneri | 24 May 2019 | Tirunelveli Mission | Incharge of Nanguneri Mission and JMJ - Farm |
| 26. | Fr. Saji Elambasseril SDB | Kalluvilai | Thuckalay | 24 May 2019 | Parish priest | Mission Procure, Bishop's House and Parish Priest of St. Mary's Mission Bishop's House, Thuckalay; Director of KKSSS |
| 27. | Fr. Sebastian (Mijo) Puthenpurayil | Additional responsibility till November 2019 | | | | Priest in charge of Loretto Matha Church Pilankarai for May-November 2019 |
| 28. | Fr. Seby Manimalakandathil | - | - | - | Director of Pulari SSS | Correspondent of St John's Nursery and Primary School, Boarder, Shenkottai; Parish Priest of Little Flower Church, Puliyarai; Director of St. Thomas Dispensary Lalakudiviruppu |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29. | Fr. Thomas (Abin) Poovathummoottil | MSW, Chennai | KKSSS-Kalluvilai | 24 May 2019 | MSW Studies | Parish Priest of St. Mother Theresa Church Kalluvilai; Assistant Director of KKSSS, Kalluvilai |
| 30. | Fr. Thomas (Ajeesh) Attiyil | Munchirai | Karode | 24 May 2019 | Parrish priest | Parish Priest of St. Joseph's Church, Karode. Director of DNN, Karode; Director of Family Apostolate |
| 31. | Fr. Thomas (Jiji) Koipuram | Annikarai | Shenkottai | 10 July 2019 | Parish Priest; Director of Diocesan Choir | Parish Priest of St. George Church Mekkarai; Director of Pulari SSS; Mission Coordinator of Shenkottai ,Tirunelveli, Thoothukudi, and Ramanathapuram |
| 32. | Fr. Thomas (Robins) Kuzhikodil | Padanthalumoodu | Vayalinkarai | 24 May 2019 | Parish Priest and Correspondent | Parish Priest of St. Antony's Church Vayalinkarai and Amala Maria Church Cheenivilai; Director Pulari communications; Director of Chrisma and Pulari Enterprises; Director of Nambikkai Alayam |
| 33. | Fr. Toji Parambilparambil | Anayadi | Sangamam. | 24 May 2019 | | Director of Sangamam Thuckalay; Director of Diocesan Choir; Parish Priest of St. George Church Anayadi |
| 34. | Rev. Fr. Abraham (Shoji) Puthenpurackal | Chenamcode | Ireland | 3 March 2019 | Parish Priest | Mission Oversees in Ireland |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 35. | Fr. Thomas Jebanesh | Vayalinkarai | Padanthalumoodu, | 24 May 2019 | Assit. Parish Priest | Asstt. Parish Priest of Sacred Heart Forane Church and St. Joseph's Church Kunnuvilai and Teacher at S.H. School Padanthalumoodu; Priest In Charge of St. Philip Church Kalluketti – Kuzhithurai; Assist. Director of Uraviam |
| 36. | Rev. Fr. Joseph (Sajan) Nettaponghu | Sangamam | Chenamcode | 3 March 2019 | | Parish Priest of Lourdhu Matha Church Chenamcode and St. John Paul II Church Kulasekharam; Office Secretary at Bishop's House; Notary of Eparchial Tribunal; Assist Director of Catechism |
| 37. | Rev. Fr. Vinu D. Joseph | Kalluvilai, | Sangamam | 3 May 2019 | Assistant Director of KKSSS | Director of Pulari Press from March 3, 2019; Parish Priest of St. Joseph's Church Thadikkarakonam and Vellambi Mission; Director of Laity Commission |

| | |
|---|---|
| **Fr. Thomas Sathianesan** | **✝ George Rajendran sdb** |
| Eparchial Chancellor | Bishop of Thuckalay |

# BISHOP'S ENGAGEMENTS MAY 2019

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-18 | Wed- Sat | | England, Ireland and Abu Dhabi |
| 19 | Sun | - | >> Trivandrum>> Thuckalay |
| 20 | Mon | 10.30 am | Karode : Marriage Holy Qurbana |
| | | 06.00 pm | Kamaraj Nagar : Blessing of CHF Convent |
| 21 | Tue | 10.00 am | Thoothur : ACH Trust Anniversary |
| | | 06.00 pm | Shenkottai: Blessing of Mr. Shiju's House |
| 22 | Wed | 09.30 am | Bishop's House : Eparchial Curia Meeting |
| | | 04.00 pm | Reethapuram : House Blessing |
| 23 | Thu | 09.30 am | Sangamam : Eparchial Priests' Conference |
| | | 05.00 pm | Mezhacode : Silver Jubilee Holy Qurbana |
| 24 | Fri | 10.00 am | Urampu: Marriage of Mr. Berlin from Athen-code |
| | | 06.00 pm | Bishop's House : Blessing of Renovated Chapel |
| 25 | Sat | - | Bishop's House |
| 26 | Sun | 11.00 am | Christurajapuram: Vincent de Paul CC meet-ing |
| | | 01.00 pm | Kalluvilai : Angels' Meet |
| 27 | Mon | 10.30 am | Thuckalay CMC : Declaration as Province |
| 28 | Tue | 02.30 pm | Marthandam : Blessing of SABS Convent |
| 29 | Wed | 09.30 am | Vattaikottai : Silver Jubilee of St. Mary's Health center |
| | | 06.00 pm | Bishop's House : Feast & Jubilee Gathering |
| 30 | Thu | - | Bishop's House |
| 31 | Fri | - | Bishop's House |

Fr. Sajan Nettaponghu,
Bishop's Secretary.



JUBILEE CELEBRATION OF FCC SISTERS




YOUTH CONVENTION JUNE 7-9, 2019 NOTICE











DIACONATE, MINOR ORDERS
AND VESTITION


**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570